[பேரவைத் தலைவர்] [1990 சனவரி 22

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (23-1-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13.47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 28-2-1989 ஆம் நாளிட்ட 117ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

46. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20—1—1989-ஆம் நாளிட்ட 101ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961 112 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47, தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு நகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு (அலுவல் நடைமுறை) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறையின் 18—7—1989ஆம் நாளிட்ட 434-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக் கப் பெற்றது.]

48. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்த மொன்று செய் வது குறித்து வருவாய்த் துறையின் 6—9—1988ஆம் நாளிட்ட 1697-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/ 1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1990 சனவரி 22]

49. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12—12—1988-ஆம் நாளிட்ட 2307-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. தமிழ்நாடு செய்தித்தாள் — காகித நிறுவனத்தின் 1988—89-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

51. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

52. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (முதலாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

19. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (இரண்டாம் பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

———